# பத்தாம் வகுப்பு தமிழ்

## இயல் 4,5,6

## செய்யுள் ,
## அணி,அலகிடுதல் மட்டும்



BalaKumar M.A,B.ED

வகுப்பு : 10 இரண்டாம் முன் திருப்புதல் தேர்வு மதிப்பெண்கள் : 50

நாள் : 15.03.2022 தமிழ் நேரம் : 1.30 மணி

குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினவாகவும் அமைதல் வேண்டும்

- அடித்தல் - திருத்தல் இருக்க கூடாது.

I. பலவுள் தெரிக: 12x1=12

1. "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பெருமைப்படுபவர் யார்?

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்

இ) கண்ணதாசன் ஈ) தமிழழன்பன்

2. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு?

அ) தேவாரம் ஆ) பெருமாள் திருமொழி

இ) பரிபாடல் ஈ) நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

3. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யார் யாரிடம் கூறியது?

அ) குலசேகர ஆழ்வாரிடம் இறைவன்

ஆ) இறைவனிடம் குலசேகர ஆழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி

ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. கீழ்க்காணும் நூல்களுள் கம்பருடன் தொடர்பற்ற நூல் எது?

அ) ஏரெழுபது ஆ) சிலைஎழுபது இ) மகாபாரதம் ஈ) அபிராமி அந்தாதி

5. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி

மருளை அகற்றி மதிக்கும் தெருளை-என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?

அ) தமிழ் ஆ) கல்வி இ) அறிவியல் ஈ) இலக்கியம்

6. கீழ்க்காண்பனவற்றுள் திருக்குறள் அமைச்சருக்குரிய பண்பாகக் கூறாத ஒன்று?

அ) வன்கண் ஆ) குடிகாத்தல் இ) நாநலமின்மை ஈ) கற்றறிதல்

7. கோசல நாடு குறைவில்லாததாக விளங்க காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோலாட்சி புரிவதால்

ஈ) அங்கு வறுமை இல்லாததால்

8. தேவர் அனையர் என்று வள்ளுவர் யாரைக் குறிப்பிடுகிறார்?

அ) சான்றோர் ஆ) நல்லோர் இ) கயவர் ஈ) பொய்கூறாதோர்

பாடலைப் படித்து விடை தருக.

வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்

பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்

மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ

ஐயோவிவன் வடிவென்பதொ ரழியாவழ குடையான்

9. கம்பராமாயணத்தில் இப்பாடல் இடம் பெற்றுள்ள காண்டம் எது?

அ) பாலகாண்டம் ஆ) யுத்த காண்டம்

இ) கிட்கிந்தா காண்டம் ஈ) அயோத்தியா காண்டம்

10. "மையோகர கதமோமறி கடலோமழை முகிலோ" இவ்வடிகளில் கூறப்படுவது யாது?

அ) இராமனின் வடிவம் ஆ) இராமனின் நிறம்

இ) இராமனின் புகழ் இ) இராமனின் படை

11. இப்பாடலில் கதிரவனைக் குறிக்கும் சொல்லை எடுத்தெழுதுக.

அ) விரிசோதி ஆ) வெய்யோன் இ) அழகுடையான் ஈ) இளையான்

12. வெய்யோ

பொய்யோ - இதில் இடம்பெற்றுள்ள தொடை நயம்

அ) மோனை நயம் ஆ) எதுகை நயம்

இ) இயைபு நயம் ஈ) முரண் நயம்

II. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 5x2=10

13. விடைக்கேற்ற வினா அமைக்க.

அ) சதம் என்றால் நூறு என்று பொருள்

ஆ) கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயம் மிக்கவை.

14. கம்பரின் பெருமையைச் சுட்டும் தொடர்கள் யாவை?

15. உலகு என முடியும் திருக்குறளை எழுதுக.

16. அ) மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

(அல்லது)

ஆ) செய்குதம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

17. சதாவதானம் என்றால் என்ன?

III. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 6x3=18

18. தண்டலை மயில் எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதுக.

19. திருக்குறள் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் எவ்வாறு பொருந்தும் என அதன் வழி விளக்குக.

https://t.me/Join_kalvikadal

20. சுற்றமும் பொருளும் பகையை வெல்ல உதவும் என்ற வள்ளுவரின் கருத்தை விளக்குக.

(அல்லது)

கா.ப. செய்குதம்பிப் பாவலர் குறிப்பு வரைக.

21. மக்களே போல்வர் கயவர்; அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில். இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

(அல்லது)

வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.

23. மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

24. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நெற்பயிர், கருவுற்ற பச்சைப்பாம்பின் வடிவம் போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, செல்வம் சேர்ந்தவுடன் பண்பற்ற மக்கள் பணிவின்றித் தலை நிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

i. கருவுற்ற பச்சைப்பாம்பின் வடிவத் எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

ii. பச்சைப்பாம்பு இலக்கணக் குறிப்புத் தருக.

iii. கற்றவர்களின் பண்பு யாது?

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2x5=10

25. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

(அல்லது)

தமிழர் மருத்துவமுறைக்கும் நவீன மருத்துவமுறைக்கும் உள்ள தொடர்பை விளக்குக.

26. கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்கை விண்ணப்பத்தை நிரப்புக.

*நிறைவுற்றது! வெற்றி பெறுக!*

விரிக்காத வரை சிறகுகள் கூட பாரம்தான்...
விரித்து பறந்தால்
வானம் கூட தொட்டுவிடும்
தூரம் தான்